**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**

**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>MCOP . No.99/2023</u>**

**<u>நாள் : 20.11.2025</u>**

**ம.சா.** 2 (மனுதாரரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.வள்ளியம்மாள் | மாவட்டம் | : | கிருஷ்ணகிரி |
| கணவர் பெயர் | : | திரு.மாணிக்கம் | வயது | : | 65 |
| ஊர் | : | நல்லாகவுண்டனூர் | தொழில் | : | பால் வியாபாரம் |
| வட்டம் | : | ஊத்தங்கரை | தேசியம் | : | இந்தியன் |

நான் MCOP.No. 100/2023 வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. கிருஷ்ணகிரி அரசு மருத்துகல்லூரி மருத்துவமனையில் வழங்கிய சி.டி. ஸ்கேன் அறிக்கை நகல் – ம.சா.ஆ.16

2. கிருஷ்ணகிரி லைப் கேர் தனியார் மருத்துவமனை வழங்கிய டிச்சார்ஜ் சம்மரி நகல் – ம.சா.ஆ.17

3. கிருஷ்ணகிரி லைப் கேர் தனியார் மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றபோது வழங்கிய மருத்துவ செலவு ரசீது (ரூ.31,600) அசல் – ம.சா.ஆ.18

4. கிருஷ்ணகிரி லைப் கேர் தனியார் மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றபோது மருந்துகள் வாங்கியதற்கான செலவு ரசீது (ரூ.6,304) அசல் – ம.சா.ஆ.19

5. கிருஷ்ணகிரி லைப் கேர் தனியார் மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றபோது வழங்கிய மருத்துவ செலவு ரசீது (ரூ.3619) (7 வரிசை) அசல்– ம.சா.ஆ.20

6. ஊத்தங்கரை அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு இணைய நகல் – ம.சா.ஆ.21

7. ஊத்தங்கரை அரசு மருத்துவமனையின் காயச்சான்று இணைய நகல் – ம.சா.ஆ.22

8. ம.சா.2ன் ஆதார் அடையாள அட்டை நகல் – ம.சா.ஆ.23

9. ம.சா.2ன் வங்கி கணக்கு புத்தகம் நகல் – ம.சா.ஆ.24

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறக்கு விசாரணை**

எங்களுக்கு சொந்தமாக மாடு உள்ளது. அதன் மூலமாக பால்வியாபாரம் செய்து வருவாய் ஈட்டி வருகிறேன். தற்போதும் நான் மாடு வைத்து பால்வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். தற்போது எனக்கு நடக்கமுடியாததால் எனது மகன்தான் மாட்டினை பராமரித்து வருகிறார். விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான்., மேற்படி தேன்மொழிக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையில் என்னை பின்னால் உட்கார வைத்துககொண்டு வாகனத்தை ஓட்டி விபத்தை தன்னிச்சையாக ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தானது தேன்மொழியின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் வாகனத்தின் பின்னால் அமர்ந்துக்கொண்டு தேன்மொழியுடன் பேசிக்கொண்டே பயணித்த நிலையில் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் ஹெல்மெட் எதுவும் அணியவில்லை, தேன்மொழி ஹெல்மெட் அணிந்திருந்தார். நான் கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் தொகை பெற்றேனா என்றால் இல்லை. நான் ஊட்டச்சத்து உள்ளிட்டதற்காக செலவிட்டதாக சொல்லப்படும் தொகையான மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதிக நஷ்ட ஈடு பெறும் நோக்கில் மனுவில் சங்கதிகளை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின்கீழ்

கோரியுள்ள தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல. தேன்மொழி ஓட்டுநர் உரிமமின்றி வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்திக்கொண்டதால் 2ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கு தேன்மொழியின் அதிவேகமும், அஜாக்கிரதையும்தான் காரணம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.